கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 2009/2010
(ஜனவரி 2013) (வெளிவாரி)

**FA 201 இலங்கைத் தமிழ் - சிங்களக் கலை வடிவங்கள் பற்றிய சிறப்பு நோக்குடன் இந்தியக் கலைவடிவங்களின் பரிணாம வளர்ச்சி**

EASTERN 10 JUN 2013

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. ஈழத்துத் தமிழ்ப் பாரம்பரியக் கலைவடிவங்கள் என நீர் கருதுவது யாது எனக் குறிப்பிட்டு, அதில் புலப்படும் அம்மக்களின் பண்பாட்டு அம்சங்களினைத் தெளிவுபடுத்துக.

02. சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் செதுக்கல் சிற்பவடிவங்களில் காவற்கல், வட்டதாமனே, சந்திரவட்டக்கல் பெறும் இடத்தினை மதிப்பிடுக.

03. "பல்லவர் காலத்தில் கட்டிடங்களினூடாகவே சிற்பக் கலை வளர்ச்சியினைக் காணலாம்." இக்கூற்றினை நியாயப்படுத்துக.

04. தமிழ் நாட்டு நடனத்தின் தோற்றப் பின்புலத்தைத் தந்து, அதன் வளர்ச்சிப்போக்கு கி.பி. 6ம் நூற்றாண்டுவரை எவ்வாறு நிலவியது என்பதனை விபரிக்குக.

05. தமிழ் நாட்டு நவீன ஓவியங்களின் தோற்றப் பின்புலத்தை தந்து, அதன் உள்ளடக்கம், பாணிகளில் ஏற்பட்ட மாற்றங்களைச் சுருக்கமாக முன்வைக்குக.

06. "இந்தியக் கலை வளர்ச்சிப் போக்கில் வட இந்தியக் கலைகளுக்கும் தனித்துவமான பங்குண்டு."

1. மொகலாயர் காலக் கட்டிடக் கலையின் பண்புகள் யாவை?
2. வட இந்தியக் கோயில்களின் பொதுத் தன்மைகளை உதாரணம் மூலம் விளக்குக.

07. யாதேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

1. குப்தர் காலக் கட்டிடங்கள்
2. நாயக்கர்கால ஓவியங்கள்
3. ஈழத்துத் தமிழ் இசைமரபு

08. சோழர்கால வெண்கலச் சிற்பங்களின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுக்களுடன் பரிசீலிக்குக.

***